***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.206/2024 – P.W. 8 ( Ad W)***

| | |
|---|---|
| *Name* | திரு. விஜயகுமார் (காவல் உதவி ஆய்வாளர்) |
| *Father/Husband's Name* | தங்கராசு |
| *Village* | தலையாமங்கலம் காவல் நிலையம் |
| *Age* | *52* |

1, 3 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.03.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தலையாமங்கலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு. வீரையன் என்பவர் இறந்துவிட்டபடியால் மேற்படி உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்பதாலும் காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 12.09.2024- தேதியன்று இரவு சுமார் 9.30 மணியளவில் அ.சா.1 தனது வீட்டில் இருந்தபோது, ஆஜர் எதிரிகள் மூவரும் அ.சா.1 ஐ தாக்கியதில் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு மேற்படி உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலை பெற்று கடந்த 13.09.2024-ந் தேதியன்று மேற்படி உதவி ஆய்வாளர் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த சோமு மகன் செல்லப்பன் என்பவரை விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவு செய்து நிலைய மனு எண்.229/2024 ஆக மனு பதிவு செய்து, மனு விசாரணைக்கு பின் சம்பவம் உண்மையென தெரியவந்த நிலையில் கடந்த 19.09.2024 ம் தேதியன்று காவல்

காவல் நிலைய குற்ற எண்.91/2024 ல் BNS பிரிவுகள் 296(பி), 118(1), 351(3) ன் கீழ் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்துள்ளார். (**அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்னர் மேற்படி காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே 19.20 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஜெயபால் மற்றும் வேலாயுதம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேலும், அன்றையதினமே சம்பவயிடத்திலிருந்து அதே சாட்சிகளின் முன்னிலையில் எதிரி மணியன் என்பவரது வீட்டில் இருந்து சம்பவத்தின் போது பயன்படுத்திய மரக்கைப்பிடியுடன் கூடிய மண்வெட்டி ஒன்றினை மேற்படி உதவி ஆய்வாளர் 19.45 மணியளவில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார். அதிலும் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார்.

4. சாட்சிகள் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வரவே எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரி மணியன் என்பவர் வாலிஓடை பாலம் அருகே நின்றுக்கொண்டிருந்தவதை அன்றையதினமே 20.30 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து, நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடயப்பொருளை படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அது நீதிமன்ற வழக்கு சொத்து எண்.105/2024 ஆகும்.(**படிவம் 91 அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் மற்ற எதிரிகளான ரமேஷ்குமார், கலா ஆகியோர்கள் திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தக்க சட்ட வழிக்காட்டுதலுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரத்தினை தெரிந்துக்கொண்டுள்ளார். நான் இவ்வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

5. பின்னர் இவ்வழக்கில் காயம் அடைந்த செல்லப்பா என்பவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்தும், சிகிச்சை அளித்த மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை

மருத்துவமனை மருத்துவர் திருமதி.சுகந்தப்பிரியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு விபத்து பதிவேட்டுடன் இணைந்த கூடிய காயச்சான்றினை பெற்றுள்ளார். (**விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று ஏற்கனவே அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**) மேற்படி மருத்துவரின் காயச்சான்றின் அடிப்படையில் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது சொற்பகாயம் என்று சான்று வழங்கியுள்ளார்.

6.. இத்துடன் அவரது புலன்விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது BNS பிரிவுகள் 296(பி), 118(2), 351(3) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என கடந்த 15.10.2024-ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின்படி இந்த வழக்கு 8 நாட்கள் காலதாமதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் எங்கள் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கைப்பற்றப்பட்டதாக சொல்லபடும் மரப்பிடியுடன் கூடிய மண்வெட்டியில் கைப்படி எவ்வளவு செ.மீ. நீளம், மண்வெட்டியின் வெட்டும் பகுதி நீள, அகலம் எவ்வளவு மண்வெட்டியின் முழு மண்வெட்டியா, அரை மண்வெட்டியா என்ற விவரங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. வழக்கு ஆவணங்களில் இவ்வழக்கின் 1வது எதிரி மணியன் இதே சம்பவத்தில் காயம்பட்டு மன்னார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தார் என்றும், அவரிடம் தாங்கள் நிலைய காவல்துறையினர் புகார்வாக்குமூலம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. இதுசம்மந்தமாக விவர குறிப்புகள் வழக்கு கோப்பில் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் இருதரப்பினர்களுக்கும் வேலி தகராறால் முன்விரோதம் உள்ளது என்றும், காவல் நிலையத்தில் பஞ்சாயத்து பேசப்படடுள்ளதா என்றால் வழக்கு ஆவணங்களில் அதுபோன்று இல்லை.

3. இந்த வழக்கில் புகார்தாரர் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் புகார்தாரரை தாக்கவில்லை என்றாலும், புகார்தாரரும், அவரது இருமகன்களும் இருட்டில் எதிரிகளிடம் தகராறு செய்ய வந்தபோது ஏற்பட்ட தள்ளுமுள்ளில்

தாங்களாகவே ரோட்டிலோ, கருங்கல்லிலோ விழுந்து இந்த காயத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றும், இருதரப்பினர்களுக்கும் இடையே வேலி தகராறில் முன்விரோதம் இருந்த காரணத்தினால் அந்த காயத்தை பயன்படுத்தி எதிரிகள் தரப்பின் மீது ஒரு பொய் வழக்கை பதிவு செய்துள்ளோம் என்றும் எதிரி காயம்பட்டு சிகிச்சையிலிருந்ததையும், அவரிடம் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தையும் புகார்தாரர் தரப்பிற்கு ஆதரவாக தாங்கள் நிலைய புலன்விசாரணை அதிகாரியால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாங்கள் நிலைய புலன்விசாரணை அதிகாரி முறையாக விசாரணை செய்யாமல் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் தயார் செய்துள்ளதால் அவருக்கு ஆதரவாகவும், புகார்தாரர் தரப்பிற்கு ஆதரவாகம் வழக்கு ஆவணங்களை பார்த்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.